மாலை பதிப்பு
# சுபீட்சம்
நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே
SUPEEDSAM
EVERYTHING FOR PEOPLE

செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள
supeedsam.com

24.07.2022 ஞாயிற்றுக்கிழமை | supeedsam.com | supeedsam@gmail.com

## அடுத்த வாரத்தில் மேலும் ஆறு எரிவாயு கப்பல்கள்



அடுத்த வாரத்தில் மேலும் ஆறு எரிவாயு கப்பல்கள் இலங்கையை வந்தடையவுள்ளதாக லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது. அதன்படி, இம்மாதத்தில் எரிவாயு இருப்பு 33,000 மெட்ரிக் தொன்னாக இருக்கும். பொதுமக்களுக்கு தொடர்ந்து எரிவாயு விநியோகத்தை உறுதி செய்யும் வகையில் இறக்குமதியை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக லிட்ரோ நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது.

02 ஆம் பக்கத்தில்...

### நாளை முதல்
## ஜனாதிபதி செயலகம் வழமைக்கு



மூன்று மாதங்களுங்களுக்குப்பின் ஜனாதிபதி செயலகம் நாளை முதல் முழுமையாக இயங்கும் என உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். போராட்டக்காரர்களால் கட்டிடத்தின் சிலபகுதிகளை ஆக்கிரமித்தபோது சேதமடைந்த கதவுகள் மற்றும் ஜன்னல்களை சுத்தம் செய்து பழுதுபார்க்கும் பணி தற்போது நிறைவடைந்துள்ளது. இதேவேளை, ஜனாதிபதி செயலக வளாகத்தில் இடம்பெற்ற குற்றச் செயல்கள் தொடர்பான சாட்சியங்களைப் பெற்றுக்கொள்வதற்காக மத்திய கொழும்பு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் ஆலோசனையின் பேரில் குற்றப் புலம் மற்றும் கைரேகை அதிகாரிகள் அடங்கிய விசேட குழுவொன்று நிறுவப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

### மைத்திரியின் வீடு
## ரணிலுக்கு

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வாழ்ந்த கொழும்பு பேஜெட் வீதியிலுள்ள வீட்டை புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தனிப்பட்ட இல்லம் தீக்கிரையாக்கப்பட்டதையடுத்து தற்போது பாதுகாப்பான இடத்தில் தங்கியுள்ளார். எனவே முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வசித்து வந்த வீட்டை ஜனாதிபதிக்கு வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. சுமார் இரண்டு மாதங்களுக்கு முன்னர், நீதிமன்ற உத்தரவின் பேரில் முன்னாள் ஜனாதிபதி இந்த வீட்டில் இருந்து வெளியேற்றப்பட்டார்.

## இலங்கையில் 6.3 மில்லியன் மக்கள் உணவுப்பாதுகாப்பு இன்றி உள்ளனர்

உலக உணவுத்திட்டம்(WFP) மற்றும் ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பு(FAO) என்பன இலங்கையின் உணவுநிலைமை மேலும் மோசமாகலாம் என தெரிவித்துள்ளது. மக்கள்தொகையில் நான்கில் ஒரு பகுதியினருக்கு சாப்பிட போதுமான உணவு இல்லை, மேலும் மில்லியன் கணக்கானவர்கள் போதுமான அளவு சாப்பிடுவதில்லை. ஐக்கிய நாடுகள் சபையின் அமைப்புக்களின் கூற்றுப்படி, நெருக்கடி தொடர்வதால் நிலைமை மோசமடைய வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.அஉலக உணவுத் திட்டம; (WFP) மற்றும் ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பு (FAO) மேற்கொண்ட சமீபத்திய பயிர் மற்றும் உணவுப் பாதுகாப்பு மதிப்பீட்டுத் திட்டத்தில், 6.3 மில்லியன் மக்கள் உணவுப் பாதுகாப்பின்றி இருப்பதாகவும், மேலும் 6.7 மில்லியன் மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய உணவுப் பொருட்களை உட்கொள்ளவில்லை என்றும் கண்டறிந்துள்ளனர். ஜூன் மாதம், இந்த வாரம் வெளியிடப்பட்ட அவர்களின் சமீபத்திய நிலைமை அறிக்கையின்படி இத்தகவல்களை வெளியிட்டுள்ளது. “நெருக்கடி மோசமடைந்தால் இந்த எண்ணிக்கை இன்னும் அதிகமாக உயரக்கூடும் என்று WFP கவலை கொண்டுள்ளது.”

## 30 நாட்களுக்கு போதுமான டீசல் கையிருப்பில்

ලංකා ඛනිජ තෙල් නීතිගත සංස්ථාව
Ceylon Petroleum Corporation

நாட்டில் அடுத்த 30 நாட்களுக்கு போதுமான டீசல் கையிருப்பில் உள்ளதாக இலங்கை பெட்ரோலிய கூட்டுத்தாபனம் தெரிவித்தது. அத்துடன், 22 நாட்களுக்கு போதுமான பெட்ரோலும் இருப்பில் உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, வாகன இலக்கத்திற்கு ஏற்ப எரிபொருள் வழங்கும் திட்டத்திற்கு சிறந்த வரவேற்பு கிடைத்துள்ளதாக அகில இலங்கை பெட்ரோல் நிலைய உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. எரிபொருளுக்கான வரிசைகளும் குறைந்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ரணில் விக்கிரமசிங்கவின்
## வெற்றியில் பங்கேடுத்த நாமல்



கடந்த 20 ஆம் திகதி இடம்பெற்ற பாராளுமன்ற வாக்கெடுப்பில் ரணில் விக்கிரமசிங்க 134 வாக்குகளுடன் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட நிலையில், அன்று இரவு நாமல் ராஜபக்சவின் வீட்டில் மாபெரும் இராப்போசன விருந்து நடைபெற்றதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. மேலும் இந்த விருந்துபசாரத்தில் மொட்டுகட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் நாமல் ராஜபக்ச அழைப்பு விடுத்திருந்தார் என்பதோடு அன்றைய இராப்போசன விருந்தில் 137 எம்.பி.க்கள் கலந்து கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது .

## பாடசாலைகள் நாளை மீண்டும் ஆரம்பம்



அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகள் நாளை (24) மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது. இதுதொடர்பாக கல்வி அமைச்சு 19.07.2022 அன்று வெளியிட்ட அறிக்கைக்கு அமைவாக மாகாணக் கல்விச் செயலாளர்கள், மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள், பிராந்தியக் கல்விப் பணிப்பாளர்கள், வலய பொறுப்பாளர், உதவி கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் அனைத்து அதிபர்களுக்கும் பாடசாலைகள் நாளை மீண்டும் ஆரம்பம் குறித்து அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. எனினும் மறு அறிவித்தல் வரை பாடசாலைகள் திங்கள், செவ்வாய், வியாழக்கிழமைகளிலேயே இடம்பெறும். புதன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் இணையத்தளத்தின் ஊடாக கல்வி நடவடிக்கை முன்னெடுக்கப்படும். இதுபற்றிய ஆலோசனை கல்வித்துறை அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டிருப்பதாக கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

### வீட்டில் இருந்து கடமையாற்ற சுற்றுநிருபம்

வீடுகளில் இருந்து வேலை எனும் முறைமையின் கீழ் அரச ஊழியர்களும் தற்போது கடமையாற்றி வருகின்றனர். அவ்வாறு கடமையாற்றும் ஊழியர்கள், இன்னுமொரு மாதத்துக்கு வீட்டிலிருந்து வேலை எனும் முறைமையின் கீழ் கடமையாற்றுவதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது, அதற்கான சுற்றறிக்கை பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ளது.





வரலாற்று சிறப்புமிகு தாந்தாமலை ஸ்ரீ முருகன் ஆலய வருடாந்த கொடியேற்றம் கடந்த வெள்ளிக்கிழமை(22) இடம்பெற்ற போது

## சட்டவிரோதமாக பலத்தை பயன்படுத்துவதை நிறுத்துங்கள்
### மனித உரிமைகள் கண்காணிப்பகம்



ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு எதிரான அனைத்து சட்ட விரோதமான நடவடிக்கைகளையும் நிறுத்தி தன்னிச்சையாக தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைவரையும் விடுவிக்குமாறு மனித உரிமைகள் கண்காணிப்பகம் கேட்டுக்கொண்டுள்ளது. இந்த முறைகேடுகளுக்கு காரணமானவர்களை விசாரித்து உரிய சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என பாதுகாப்புப் படையினருக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உடனடியாக உத்தரவிட வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது. காலி முகத்திடல் போராட்டக்காரர்கள் மீதான தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்து வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் தெற்காசிய பணிப்பாளர் மீனாட்சி கங்குலி

02 ஆம் பக்கத்தில்...

### அடுத்த வாரத்தில் மேலும் ஆறு எரிவாயு

முன்னதாகநாளாந்தம் 80,000 உள்நாட்டுஎரிவாயு சிலிண்டர்கள் சந்தைக்கு வெளியிடப்பட்ட போதிலும், தற்போது அதனை 100,000 ஆக அதிகரிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

### சட்டவிரோதமாக பலத்தை

இதனை தெரிவித்துள்ளார். சட்டத்தின் ஆட்சியை விட மிருக பலத்தின் மூலம் செயற்பட விரும்புகின்றோம் என்ற ஆபத்தான செய்தியை, இந்த நடவடிக்கைகள் ஊடாக புதிய அரசாங்கம் மக்களுக்கு அனுப்புகிறது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். பதவியேற்ற ஒரு நாளுக்குப் பின்னர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் மேற்பார்வையில் கொழும்பில் அமைதியான போராட்டக்காரர்கள் மீது பாதுகாப்புப் படையினரின் கொடூரமான தாக்குதலை மேற்கொண்டுள்ளதாக மீனாட்சி கங்குலி குற்றம் சாட்டியுள்ளார். மேலும் மக்களின் உரிமைகளை நசுக்கும் அரசாங்கத்தை ஆதரிக்க முடியாது என்ற செய்தியை இலங்கைக்கு அவர்களின் சர்வதேச பங்காளிகள் உரத்த குரலில் வலியுறுத்த வேண்டும் என்றும் மீனாட்சி கங்குலி கேட்டுக்கொண்டுள்ளார்.

# ரணில் தனது அடாவடித்தனத்தை கறுப்பு உடையணிந்த படைகளை வைத்து ஆரம்பித்துள்ளார்

## கிழக்கு மக்கள் ஒன்றியம்




ரவ்பீக் பாயிஸ்

தமது உரிமைகளை கோரி காலி முகத்திடலில் அமைதியான முறையில் போராட்டங்களை நடத்தி வந்த போராட்டக்காரர்கள் மீது தொடுக்கப்பட்ட வன்முறை சம்பவங்களை முற்றிலும் கண்டிப்பதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் கிழக்கு மக்கள் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பாளருமான ஜயந்த விஜேசகர தெரிவித்தார். கிழக்கு மக்கள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் திருகோணமலை மாவட்ட ஊடக இல்லத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்தும் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் குறித்த சங்கத்தின் ஒருங்கிணைப்பாளருமான ஜயந்த விஜேசகர. தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்ஹ அவர்கள் பிரதமரானபோது தடை இன்றி எரிபொருள் மற்றும் எரிவாயு என்பனவற்றை வழங்குவதாக உறுதியளித்திருந்தார், எனினும் தாம் ஜனாதிபதி ஆனந்தன் பின்னர் பொதுமக்களைப் பற்றி சிந்திக்காது தமது அரசியல் தந்திரோபாயங்களை பயன்படுத்தி அமைச்சுப் பதவிகளை வழங்கி தமது ஆட்டத்தை ஆரம்பித்திருக்கிறார் இதனை நாம் வன்மையாக கண்டிக்கின்றோம் என தெரிவித்தார் அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களை கலைப்பதற்கு ஜனாதிபதி அவர்கள் முப்படையினரை பயன்படுத்திய அதேவேளை அவர்களுக்குள் கண்களை கட்டிக்கொண்டு கறுப்புநிற முகமூடி அணிந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களை தாக்கியவர்கள் யார் என கேள்வி எழுப்பினார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர் அல்ல ராஜபக்சக்களின் மறு உருவமே இதனை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும் என்பதுடன் போராட்டத்தினை கைவிடாது தொடர்ச்சியாக முன்னெடுக்க அனைவரும் முன்வரவேண்டும் எனக் குறிப்பிட்டார்.

## கல்லடி உப்போடை அருள்மிகு ஸ்ரீ பேச்சியம்மன் ஆலய வருடாந்த சடங்கு உற்சவம்




(சுதா)

கிழக்கிலங்கையின் மீன்பாடும் தேன்நாடாம் மட்டுமாநகரில் தேத்தாமர நிழலில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்பாலித்துக்கொண்டிருக்கும் ஆகிபராசக்தி பேச்சியம்மன் ஆலய வருடாந்த சடங்கு உற்சவமானது எதிர்வரும் 31.07.2022 திகதி திருக்கதவு திறத்தல் மற்றும் திருக்கும்பம் வைத்தலுடன் ஆரம்பமாகவுள்ளது. திருக்கதவு திறக்கப்பட்டு, கும்பம் வைத்தலுடன் ஆரம்பமாகவுள்ள முதல் நாள் சடங்கானது ஆலய பரிபாலன சபையினர் சார்பாக நடாத்தப்படவுள்ளதுடன், இரண்டாம் நாளான 01.08.2022 திங்கட்கிழமை பகல் சடங்கினை டாக்டர் பூபாலரெத்தினம் குடும்பமும் இரவுச் சடங்கினை ஊர்க்குடிமகன் மா.சுந்தரலிங்கம் அவர்களும் நடத்தவுள்ளனர். செவ்வாய்க்கிழமை 02.08.2022 திகதி "கண்ணகித் தாயாரிடம் செல்லல்" நிகழ்வினை 4ஆம் குறிச்சிப் பொதுமக்கள் நடாத்தவுள்ளனர். 03.08.2022 புதன்கிழமை 5ஆம் குறிச்சிப் பொதுமக்கள் திருச்சடங்கை நடத்துவதுடன் தொடர்ந்து 04.08.2022 வியாழக்கிழமை 1ஆம் குறிச்சிப் பொதுமக்களும், 05.08.2022 வெள்ளிக்கிழமை பலிச்சடங்கினை 2ஆம் குறிச்சிப் பொதுமக்களும், 06.08.2022 சனிக்கிழமை 3ஆம் குறிச்சிப் பொதுமக்களும் நடத்தவுள்ளனர். 07.08.2022 திகதி ஞாயிற்றுக்கிழமை மடிப்பிச்சை எடுத்தல், நெல் குற்றல் நிகழ்வுகளைத் தொடர்ந்து, 08.08.2022 திகதி திங்கட்கிழமை அதிகாலை வேளையில் விநாயகப்பானை பொங்கலிட்டு அதனைத்தொடர்ந்து நண்பகல் 12.00 மணியளவில் பள்ளையப்பானை பொங்கி, அம்பாளுக்கு பள்ளையம் படைத்து கன்னிமாருக்கும் பரிகலங்களுக்கும் படையல் படைத்து பூசை வழிபாடுகள் இடம்பெற்று, தேவாதிகள் உள்ளிட்ட பூசகர்களினால் அடியார்களுக்கு மடிப்பிச்சை பிரசாதம் வழங்கியதனைத் தொடர்ந்து, அம்பாளின் திருக்கும்பங்கள் சொரிதலுடன் இவ்வாண்டிற்கான சடங்கு உற்சவம் இனிதே நிறைவடையவுள்ளதுடன், எதிர்வரும் 10.08.2022 திகதி புதன்கிழமை வைரவர் பூசை இடம்பெறவுள்ளது. ஆலய சடங்கு உற்சவங்கள் அனைத்தையும் ஆலய முதன்மை பூசகர் கு.கிருஷ்ணகுமார் தலைமையிலான பூசகர்கள் நடாத்தவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## பொலிஸ் நிலையங்களுக்கு புதியபெயர் பலகை




(பாறுக் ஷிஹான்)

பொலிஸ் நிலையங்களுக்கான புதிய பெயர் பலகைகள் நடும் திட்டத்தின் கீழ் அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு பொலிஸ் நிலையங்களுக்கான பெயர் பலகைகள் புதிதாக மாற்றப்பட்டு வருகின்றன. அந்த வகையில் நீண்ட காலமாக சேதமடைந்து காணப்பட்ட கல்முனை தலைமையக பொலிஸ் நிலையம் கல்முனை பிராந்திய உதவி பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயம் போன்றவற்றுக்கான புதிய பெயர் பலகைகள் இன்று புதிதாக மாற்றம் செய்யப்பட்டுள்ளன. குறித்த நடவடிக்கையினை கல்முனை உதவி பொலிஸ் அத்தியட்சகர் ரீ. எச். டி .எம். எல். புத்திக கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம். ரம்ஷீன் பக்கீர் ஆகியோர் பார்வையிட்டனர். மேலும் கல்முனை பிராந்தியத்தில் கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய எல்லைக்குட்பட்ட பல பகுதிகளிலும் குற்றச்செயல்கள் குறைந்துள்ளதுடன் பொலிஸாரும் பொதுமக்களுடன் சிநேகபூர்வமாக தொடர்புகளை மேற்கொண்டு குற்றச்செயல்களை குறைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

## கதிர்காம பாதயாத்திரிகளுக்கு நிதி உதவி வழங்கிய க.துரைநாயகம்



(எஸ்.சபேசன்)

கதிர்காம பாதயாத்திரிகளுக்கு குடிநீர்வழங்குவதற்காக சுவிஸ் உதயம் அமைப்பின் ஏற்பாட்டில் போரதீவு எரிபொருள் நிரப்பு நிலையத்தின் அனுசரணையில் 50 ஆயிரம் ரூபாவினை சனிக்கிழமை 23 ஆம் திகதி உகந்தை முருகன் ஆலயத்தில் வைத்து லகுகல பிரதேச செயலாளர் என்.நவநீதராஜாவிடம் வழங்கிவைக்கப்பட்டது. போரதீவு எரிபொருள் நிரப்பு நிலையத்தின் உரிமையாளரும் சுவிஸ் உதயத்தின் தாய்ச்சங்கத்தின் பொருளாளரும் சமூகசேவகருமான க.துரைநாயகம் அவர்களது சொந்த நிதியினை இதற்காக வழங்கி வைத்துள்ளார் இந்நிதியினை இவ் அமைப்பின் இலங்கைக்கான பொருளாளர் பாவாணர் அக்கரைப்பாக்கியன் அதனுடைய பிரதிச் செயலாளர் ஊடகவியலாளர் சா.நடனசபேசன் அதிபர் எஸ். செல்வம் ஆகியோர் கலந்துகொண்டு நிதியினை வழங்கிவைத்தனர். இந்நிகழ்வில் கிழக்குமாகாண கலாசார பணிப்பாளர் ச.நவநீதன் ஆலய குருக்கள் சிவசிறிசீத்தாராமன் கலந்துகொண்டனர். வழமையாக அரசிடமிருந்து கிடைக்கும் நிதியுதவி இம்முறை இதுவரை கிடையாத காரணத்தினால் பிரதேச செயலாளர் அவர்கள் பொது அமைப்புகள் தனவந்தர்கள் சமூக சேவையாளரகளிடம் உதவி கோரி வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. கடந்த இரண்டு வருடங்களாக கொரோனா காரணமாக காட்டுப்பாதை திறக்கப்படவில்லை ஆதலால் இம்முறை 22 ஆம் தேதி வெள்ளிக்கிழமை காட்டுப் பாதை திறக்கப்பட்டு .அதன் ஊடாக பல்லாயிரக்கணக்கான பாதயாத்திரை அடியார்கள் பயணம் செய்ய இருக்கின்றார்கள். இவர்களுக்கு வழமையாக அம்பாறை அரசாங்க அதிபரிடமிருந்து கிடைக்கும் நிதியுதவி யினால் குறித்த விடையங்களை லாகுகலை பிரதேச செயலகம் செய்து வந்தது . நாட்டில் நிலவும் சமகால பொருளாதார நெருக்கடி காரணமாக இம்முறை அத்தகைய நிதியை பெற முடியாத சூழல் நிலவுகிறது. எனவே பாதயாத்திரை குழுவினருக்கு இந்த வசதிகளை வழங்குவதற்காக பொது அமைப்புகள் தலைவர்கள் மற்றும் தனவந்தர்கள் உதவுமாறு கேட்டுக் கொண்டதற்கு இணங்க சுவிஸ் உதயம் அமைப்பு இவ் உதவியினை வழங்கிவைத்துள்ளது



"தேனாட்டில் கதிர்காமம் என புகழ்ந்து கூறும்
தாந்தாமலை சென்று சண்முகனை வழிபட்டால்
அல்லல்போம், தொல்வினைபோம் ஆன
செல்வமத்தனையும் இன்பமுடன் பெற்று இனிது வாழ்வாரே"

அனைத்து விதமான ஆலய வெண்கலப்பொருட்கள், வீட்டுக்குத் தேவையான
அனைத்துப் பொருட்களையும் பெற்றுக்கொள்ள நாட வேண்டிய இடம்

குணா மல்ரி சொப் மற்றும் உமா பென்சி ஹவுஸ்
பிரதான வீதி, கொக்கட்டிச்சோலை



# தாந்தாமலை அருள்மிகு ஸ்ரீ முருகன் ஆலய

# வருடாந்த மகோற்சவப் பெருவிழா -2022

## திருக்கொடியேற்றம்
## 22.07.2022 வெள்ளிக்கிழமை

## தீர்த்தோற்சவம்
## 12.08.2022 வெள்ளிக்கிழமை

இலங்கை திருநாட்டின் இயற்கை எழில் கொஞ்சும் கிழக்கு மாகாணத்தில் மீனனிங்கள் கவிபாடும் மட்டக்களப்பில் வந்தோரை வாவென்று அழைக்கும் மக்கள் வாழ்கின்ற தேசம் படுவான்கரையில் மண்முனை தென்மேற்கு பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட ஒரு எல்லையிலும் அம்பாரை மாவட்டத்திற்கு அயலிலும் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் இருந்து 10மைல் கல் தொலைவில் காடும் காடுசார்ந்த பிரதேசமும், மலையும் மலைசார்ந்த பிரதேசமும், வயலும் வயல் சார்ந்த பிரதேச நிலமும் சூழ அமையப்பெற்றுள்ள இடமே தாந்தாமலை அங்கு எழுந்தருளி அருள் மழை சொரியும் முருகப் பெருமானின் கோயில் வரலாறு தொன்மை வாய்ந்தது. இவ்வாலயத்தின் வரலாறு கூத்திகன் – சேனன், உலகநாச்சி, ஆடகசௌந்தரி, குளக்கோட்டன், ஆகியோருடன் தொடர்பு பட்டு நிற்பதை வரலாற்றுச் சான்றுகளும், கர்ணபரம்பரைகதைகளும் சான்று பகிர்கின்றது. ஆதியில் ஆதிதிராவிடர்களின் மரவழிபாட்டுடன் தொடர்புடையதாக கொக்கட்டிச்சோலை தான்தோன்றிஸ்வரர் வழிபாடும் திறந்த வெளிக்கோயிலாக தாந்தாமலையும் இருந்ததாக கர்ண பரம்பரைகதைகளூடாக அறியமுடிகின்றது. தாந்தாமலையின் உச்சியில் சிலந்தி மரம் ஒன்றும் அதனடியில் பிள்ளையார் ஒன்றும் இருந்தன என்பதை அறியக்கூடியதாகவுள்ளதோடு கதிர்காம க்ஷத்திரியர்களின் வழிபாட்டு தலமாக தாந்தாமலை இருந்துள்ளது. ஆடகசௌந்தரி ஆட்சி காலத்தில் தாந்தாமலை ஆலயத்தை தரிசித்ததாகவும் மாளிகை அமைத்து தங்கியும் இருந்ததாகவும் கர்ண பரம்பரை கதைகள் கூறுகின்றது இதற்குச் சான்றாக இன்றும் இரசதானி அமைந்திருந்த தடயங்களும் கற்றூண்களும் மற்றும் சிற்பவேலைப்பாடுகள் சிதைந்து அழிந்த கற்களும் காணக்கிடக்கின்றன. இப்பிரதேசம் மலையும் மலைசார்ந்த இடமும், வயலும் வயல் சார்ந்த இடமுமாக உள்ளதால் அதிகளவான மக்கள் மழையை நம்பி விவசாயம் செய்கின்றனர் அதனடிப்படையில் மழை இல்லாத காலத்தில் மலைப்பிள்ளையாருக்கு பொங்கல் வைத்து பூசை செய்தால் மழை பொழிந்து இன்புற்ற வரலாறுகள் உள்ளதுடன் அது இன்றும் வழக்கத்தில் உள்ளதை காணமுடிகின்றது.

## 22.07.2022ம் திகதியிலிருந்து தொடர்ச்சியாக கிராம ரீதியான திருவிழாக்கள் நடைபெறும்

## 12.08.2022ஆம் திகதி வெள்ளிக்கிழமை அதிகாலை 5மணிக்கு எம்பெருமானுக்குரிய புண்ணிய தீர்த்தோற்சவம் நடைபெறும்



**விளம்பர அனுசரணையாளர் : சோமசுந்தரம் சுரேஸ் (முனைக்காடு)**

# வீட்டின் யன்னல் வழியாக சென்று திருடிய நபர் கைது



(எஸ்.எம்.எம்.முர்ஷித்)

வாழைச்சேனை பொலிஸ் பிரிவில் இன்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை இடம்பெற்ற திருட்டுச் சம்பவம் தொடர்பில் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி லசந்த பண்டார தெரிவித்தார். கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள வாழைச்சேனை நெசவு வீதியிலுள்ள வீட்டு சமயலறை யன்னல் வழியாக உள் நுழைந்த திருடன் வீட்டின் பதினைந்து வயதுடைய சிறுமியின் தங்க மாலையை அறுக்க முற்பட்ட போது சிறுமி சத்தம் எழுப்பிய நிலையில் திருடன் தப்பி சென்றுள்ளார். இன்று அதிகாலை 3 மணியளவில் வந்த திருடன் அலுமாரியை உடைத்து அதிலிருந்த இருபத்தையாயிரம் ரூபாய் பணத்தினை எடுத்ததன் பிற்பாடு அங்கு உறங்கிக் கொண்டிருந்த சிறுமியின் கழுத்தினை நசுக்கி தங்க மாலையை அறுத்த நிலையில் சத்தம் போட்டதன் காரணமாக வீட்டில் இருந்தவர்கள் எழும்பிய நிலையில் மாலையை எடுக்காமல் தப்பிச் சென்றுள்ளார். சிறுமி கூறிய அடையாளத்திற்கமைய குறித்த திருட்டு சம்பவத்துடன் தொடர்புடைய இளைஞரை வாழைச்சேனை பொலிஸார் கைது செய்துள்ளதுடன், குறித்த இளைஞர் திருட்டு சம்பத்துடன் பல தடவை கைது செய்யப்பட்டவர் என்றும் வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி லசந்த பண்டார தெரிவித்தார். பிரதேசத்தில் அதிகரித்துள்ள போதைப் பொருள் பாவனையால் இவ்வாறான திருட்டுச் சம்பவம் இடம்பெற்று வருவதுடன், கைது செய்யப்பட்ட சந்தேக நபர் போதைப் பொருள் பாவனையால் பலமுறை சிறைச்சாலைக்கு சென்று வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

### சத்தியசேவா நிறுவனத்தின் நிதிப்பங்களிப்பில்

# இராணுவத்தின் உதவியுடன் வீடு

சாவகச்சேரி நிருபர்

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மட்டுவில் சந்திரபுரம் ஜே.:.315 கிராமத்தில் உள்ள பயனாளிக் குடும்பம் ஒன்றிற்கான வீடு அமைக்கப்பட்டு 22.:.07.:.2022 வெள்ளிக்கிழமை கையளிக்கப்பட்டது. ஸ்ரீ சத்தியசேவா அமைப்பின் நிதிப் பங்களிப்பில் இலங்கை இராணுவத்தினரின் சரீர உழைப்பில் குறித்த 15இலட்சம் ரூபாய் பெறுமதியான வீடு அமைக்கப்பட்டு கையளிக்கப்பட்டுள்ளது.நிகழ்வில் பிரதம அதிதியாக யாழ் மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சந்தன விஜயசுந்தர கலந்து சிறப்பித்திருந்தார்.மேலும் நிகழ்வில் ஸ்ரீ சத்தியசேவா அமைப்பின் தலைவர் மனோகரன்,சத்தியசேவா அமைப்பின் தேசிய இணைப்பாளர் கு.சிவராம்,52வது படையணித் தலையக அதிகாரி மேஜர் ஜெனரல் பெர்ணாந்து, 523ஆவது படையணித் தலைமையக அதிகாரி,சந்திரபுரம் கிராம அலுவலர்,மட்டுவில் சந்திரமௌலீசா பாடசாலை அதிபர்,இராணுவ அதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்து சிறப்பித்திருந்தனர். பேர்த்தியாரின் அரவணைப்பில் வளர்ந்து வரும் இரு சகோதரர்களுக்கே குறித்த வீடு அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# உளவியல் டிப்ளோமாவைப் பூர்த்தி செய்தோருக்கு சான்றிதழ்கள் வழங்கி வைப்பு

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

சீகாஸ் உயர்கல்வி நிறுவனத்துடன் இணைந்ததாக சாந்திகம் நிறுவனம் ஏற்பாடு செய்த ஒரு வருட உளவியல் டிப்ளோமா கற்கை நெறியினைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு யாழ்ப்பாணம் சாந்திகம் உள்ளக மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன் போது நாட்டின் பல பாகங்களில் இருந்தும் ஒரு வருட உளவியல் டிப்ளோமா கற்கை நெறியினைப் பூர்த்தி செய்த மாணவர்கள் சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். இந்நிகழ்வின் போது பிரதம அதிதியாக சீகாஸ் உயர்கல்வி நிறுவனத்தின் தவிசாளர் செயினுலாப்தீன் நஜ்முத்தீன் மற்றும் ஏனைய அதிதிகளாக சாந்திகம் நிறுவனத்தின் தலைவர் கலாநிதி சி.ஜீவசுதன், அதன் வரவிருக்கும் தலைவர் கலாநிதி கே. கஜவிந்தன், அதன் பணிப்பாளர் சி.திலீபன், சீகாஸ் உயர்கல்வி நிறுவனத்தின் கல்விக்கான பணிப்பாளர் கலாநிதி சிஹ்னாஸ் துரே மற்றும் சீகாஸ் உயர்கல்வி நிறுவனத்தின் கல்விக்கான இணைப்பாளரும் பிரதிப் பதிவாளரும் ஆசிரியருமான மௌலவி அல்-ஹாஜ் ஐ.எல் அப்துல் முனாப், அறிவிப்பாளர் ஏ.எம். இன்ஸாப் மற்றும் பல கல்விமான்கள், புத்திஜீவிகள், சான்றிதழ் பெறும் மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

இதன் போது சீகாஸ் உயர்கல்வி நிறுவனத்தின் பணிப்பாளர் உரையாற்றுகையில், "கல்விதான் இந்த வாழ்க்கையினுடைய தலையெழுத்தை நிர்ணயிக்கப் போகின்றது. எங்களுடைய எதிர்காலம் சிறக்க வேண்டுமாக இருந்தால், கண்டிப்பாக எங்களுக்குக் கல்வி அவசியம். கல்விக்கு எப்போதும் வயது கிடையாது, அதற்கு எல்லை என்பதும் கிடையாது. யாவரும் கல்வியில் உச்சம் தொட வேண்டும். நாட்டினுடைய தற்போதைய நிலையினைக் கருத்திற் கொண்டு பார்க்கின்ற போது கல்வி அறிவைச் சிறப்பாகப் பெற்றவர்களால் மாத்திரம் தான் இந்த நாட்டைச் சிறப்பாக வழிநடாத்த முடியும். அவர்களுக்கு எவ்விதத் தடையும் இல்லை என்பது தெளிவாகத் தெரிகின்றது. கால சூழலுக்கு ஏற்ப எச்சந்தர்ப்பத்திலும் கல்வி கற்பதற்கான வசதி வாய்ப்புகள் எங்களுக்கு வந்துகொண்டிருக்கின்றன. எனவே, நாங்கள் எந்த வகையிலும் கல்வியைக் கற்றுக் கொள்ளலாம். எல்லோரும் கல்வியில் ஆர்வம் காட்ட வேண்டும். எல்லோரும் பல்துறை கற்க வேண்டும். கல்வியால் சிறக்க வேண்டும் " என்று கல்வியின் முக்கியத்துவம் சார்ந்த பல்வேறுபட்ட விடயங்களைக் குறிப்பிட்டார்.



"வேண்டுவார் வினைதீர்க்கும் வேலவன் வீற்றிருக்கும் தாந்தாமலைப் பதியை தானாடிச் சென்றிடுங்கால் தொல்வினைகள் தீர்த்து துயரங்கள் அகன்று இன்பமுடன் வாழ்வார் உலகில்"

தாந்தாமலை ஸ்ரீ முருகனுக்கு மகோற்சவப் பெருவிழா - 2022

திருக்கொடியேற்றம்
22.07.2022 வெள்ளிக்கிழமை

தீர்த்தோற்சவம்
12.08.2022 வெள்ளிக்கிழமை

விளம்பர அனுசரணையாளர் : முத்துலிங்கம் அருட்செல்வம் (மகிழடித்தீவு)

# காலி முகத்திடலில் செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்களின் கடமைகளுக்கு குந்தகம் ஏற்படுத்தியமை, தாக்கப்பட்டமைக்கு முஸ்லிம் மீடியா போரம் கடும் கண்டனம்

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

கொழும்பு காலி முகத்திடலில் (22) வெள்ளிக்கிழமை அதிகாலை ஏற்பட்ட பதற்ற நிலையின் போது செய்தி சேகரிக்கச் சென்ற தேசிய மற்றும் சர்வதேச ஊடகவியலாளர்களின் கடமைகளுக்குக் குந்தகம் ஏற்படுத்தப்பட்டதுடன் சர்வதேச ஊடக நிறுவனத்தின் ஒளிப்பதிவாளரும் தாக்கப்பட்டுள்ளார். இந்தச் செயற்பாட்டை ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் வன்மையாகக் கண்டிப்பதாக போரம் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, பாதிக்கப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு போரம் சார்பாக எமது ஆழ்ந்த கவலைகளைத் தெரிவித்துக் கொள்வதோடு, இந்த விடயம் தொடர்பில் நடுநிலையான விசாரணை ஒன்றை முன்னெடுக்க வேண்டும் என்று வேண்டிக் கொள்கிறோம். இனிவரும் காலங்களில் எந்தவொரு தடைகளும் இல்லாமல் ஊடகவியலாளர்கள் தமது கடமைகளைச் சுதந்திரமாகச் செய்வதற்கு அனைத்துத் தரப்பினரும் பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் கேட்டுக்கொள்கின்றது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பாடசாலைகள் எதிர்வரும் திங்கட்கிழமை ஆரம்பிக்கப்படும் என அறிவித்த போதும் அதற்கான நடவடிக்கைகள் ஏற்படுத்தப்படவில்லை



(எஸ். சதீஸ்)

பாடசாலைகள் எதிர்வரும் திங்கட்கிழமை ஆரம்பிக்கப்படும் என அறிவித்திருக்கின்றார்கள். ஆனால் அதற்கான நடவடிக்கைகளை சரியாக செய்திருக்கின்றார்களா எனும் பிரச்சனை எழுகின்றது. என இலங்கை அரசாங்க ஆசிரியர்களின் சங்கத்தின் உபதலைவர் ஜ/வராசா. ருபேஷன் தெரிவித்துள்ளார். சனிக்கிழமை (23) மட்டக்களப்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் குறிப்பிடுகையில்,

எதிர்வரும் திங்கட்கிழமை 25ம் திகதி பாடசாலைகள் ஆரம்பமாகும் என கூறப்பட்டுள்ளது. எனினும் மீண்டும் எப்போது மூடப்படும் என்ற அச்சத்திலேயேதான் பாடசாலையை ஆரம்பிக கூடியதாக இருக்கும். தற்போதய காலகட்டத்தில் மாணவர்களின் கல்வியினை சீராகக் கொண்டு நடத்துவதற்கு பல யோசனைகளை முன்வைத்து அவற்றை சரியாக திட்டமிட்டு நடைமுறைப்படுத்துமாறு நாம் கல்வி அமைச்சருக்கும் கல்வி அமைச்சுக்கும் பல தடவைகள் கோரிக்கை விடுத்தும் அவை இன்றுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை. இன்றைய சூழ்நிலைக்கேற்ப மாணவர்களின் கல்வி உரிமையை உறுதிப்படுத்த சிறிய மாற்றத்தை ஏற்படுத்துங்கள் என கேட்டுக் கொண்டிருக்கின்றோம் இருந்தும் இன்றைய காலகட்டத்திலே மக்கள் நாட்டினை மீளகட்டி எழுப்பக்கூடிய தலைமைகளை எதிர்பார்க்கின்ற அல்லது கேட்கின்ற பொழுது புதிய ஜனாதிபதியை அல்லது புதிய அமைச்சரவையை தெரிவு செய்கின்றோம் என்று கூறிக்கொண்டு எவ்வாறு அதில் மாற்றங்களை ஏற்படுத்தவில்லையோ அதே போன்று தான் கல்வியிலும் இவர்கள் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். இன்றைய காலகட்டத்திலே பாடசாலைகளை சீராக நடத்தி செல்வதற்கு முக்கிய பிரச்சினைகளை காணப்படுவது போக்குவரத்து மற்றும் எரிபொருள் பற்றாக்குறையே ஆகும். எனவே மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பாடசாலைக்கு செல்வதற்கு உரிய போக்குவரத்து வசதிகளை செய்து கொடுத்தால் இந்த பாடசாலைகளை மூடுவதற்கான எந்த ஒரு அவசியமும் ஏற்படாது. ஏதோ ஒரு வகையில் பொதுப் போக்குவரத்தை தடையின்றி நடத்திச் செல்ல முயற்சிகள் செய்யப்படுகின்றது அதேபோன்று ஒரு முயற்சியினை இந்த மாணவர்களின் எதிர்காலத்தினை கருத்தில் கொண்டு ஒரு சிறந்த போக்குவரத்து ஏற்பாட்டினை இவர்களுக்கு செய்து கொடுக்க முன்வர வேண்டும். கடந்த காலங்களில் தகர்ப்புறமாணவர்களாக இருக்கட்டும் கிராமப்புற மாணவர்களாக இருக்கட்டும் இவர்கள் பொதுப்போக்குவரத்தினை அல்லது வீதியால் செல்கின்ற வாகனங்களை பயன்படுத்தி எவ்வாறு பயணத்தினை மேற்கொண்டு இருந்தார்கள் என்பதை கவனித்திருக்கின்றோம் இது மாணவர்களுக்கு பாதுகாப்பான போக்குவரத்து வசதி அல்ல. எனவே உடனடியாக அரசாங்கமும் அவ் அவ் பிரதேசங்களில் இருக்கின்ற பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளும் மாணவர்களுக்கு தொடர்ச்சியான கல்வியினை வழங்குவதற்கான இந்த போக்குவரத்து ஏற்பாட்டினை செய்து கொடுப்பதற்கு முன்வர வேண்டும் என்கின்ற கோரிக்கையை முன்வைக்கின்றோம். அதேபோன்று பாடசாலை செல்லும் நாட்கள் திங்கள்,செவ்வாய், வியாழன் என அறிவிக்கப்பட்டுள்ளது. இது தூர இடங்களில் இருந்து பாடசாலை சென்று தங்கி இருந்து சேவையாற்றும் ஆசியர்களுக்கு பொருத்தமற்ற செயற்பாடாகும் எனவே தொடர்ச்சியாக மூன்று நாட்கள் நடைபெறும் வகையில் ஏற்பாடுசெய்தால் எரிபொருள் மற்றும் எனய பொருட்களை பெற்றுக்கொள்ள வரிசையில் காத்திருக்க இவர்களுக்க்கு அந்த நாளை பயன்படுத்த சந்தர்பம் கிடைக்கும். அத்துடன் பொருளாதார சிக்கலால் உளரீதியாகவும் உடல் ரீதியாகவும் மாணவர்கள் பலர் இன்று பாதிக்கப்பட்டுள்ளனர் எனவே மாணவர்களை மேலும் மேலும் அழுத்தத்திற்கு உள்ளாக்காது சில நெகிழ்வு தன்மைகளை கடைப்பிடித்து சந்தோசமான கல்வியை வழங்க ஆசியர்களுக்கு உரிய அதிகாரிகள் ஒத்துழைக்க வேண்டும். எனவும் தெரிவித்தார்.

# நிஷாதினின் சுய முயற்சியால் றிக்சா வண்டிகள் கண்டுபிடிப்பு



(ஏறாவூர் நஸீர்)

தற்போதைய அசாதாரண சூழ்நிலையில் எரிபொருளுக்காக, எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நாட்கணக்கில் காத்திருந்தும் எரிபொருளை பெற்றுக்கொள்ள முடியாமல் வீடுதிரும்பிய சுயதொழிலாளியான ஏறாவூரைச் சேர்ந்த ஹச்சிமுகம்மது நிஷாத், தன்னாலும் முடியும் என்று, தன்னிடமிருந்த பொருட்களைக் கொண்டு மூன்று றிக்சா வண்டிகளை வடிவமைத்து அவற்றை இன்று வெற்றிகரமாக இயக்கிக் காட்டியுள்ளார். உள்ளூர் பாடசாலை மற்றும் வைத்தியசாலைகளுக்கு செல்ல இந்த றிக்சாவை பயன்படுத்த முடியும். மேலும் மரக்கறி வியாபாரத்துக்கான றிக்சா வண்டி மற்றும் உணவுப்பண்டங்கள் விற்பனைக்கான றிக்சா வண்டிகளையும் தயாரித்துள்ளார். தனது சுயமுயற்சியின் வெளியீட்டை காண பிரதேச மரண விசாரணை அதிகாரி எம்.எஸ்.எம்.நஸீர், ஏறாவூர் பற்று பிரதேச சபை உறுப்பினர் அன்வர் மற்றும் பொதுச்சுகாதார பரிசோதகர் எம். முபாறக் ஆகியோர் அழைக்கப்பட்டிருந்தனர். ஐந்தாம் ஆண்டுவரை கல்விகற்ற நிஷாத் வெதுப்பக தொழிலை செய்து வந்ததோடு, சுயதேடலினால் கணணி ஒன்றை தயாரிக்கும் திறனையும் கொண்டிருக்கிறார். இவரது கடின உழைப்புடன் கூடிய, பல்வேறு சுயதேடல்களையும் முயற்சியையும் அனைவரும் பாராட்டி வருகின்றமையும் குறிப்பிடத்தகது.

# வாகன இலக்கத் தகட்டை மாற்றினால் 3 மாத சிறை

எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு செல்லும் போது வாகனத்தின் இலக்கத் தகடுகளை மாற்றியிருப்பது கண்டுபிடிக்கப்பட்டால் 20,000 ரூபா அபராதம் அல்லது மூன்று மாத சிறைத்தண்டனை விதிக்கப்படும் என பொலிஸ் தலைமையகத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இந்தக் குற்றத்திற்காக வாகனத்தின் உரிமையாளரைக் கைது செய்து, அந்தக் குற்றத்துக்கான தண்டனையை நீதிமன்றத்தில் வழங்க முடியும் என்று அதிகாரி கூறினார். 1984 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க மோட்டார் வாகனச் சட்டம், 2009 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க மோட்டார் வாகனச் சட்டத்தின் மூலம் திருத்தப்பட்டது மற்றும் அதில் காட்டப்பட்டுள்ளபடி இந்த அபராதங்களைச் செயல்படுத்தலாம். மேலும், இந்தக் குற்றத்தின் இரண்டாவது அல்லது அதற்குப் பிறகு பிடிபட்ட நபருக்கு 30,000 ரூபாவுக்கு குறையாத ஆனால் 50,000 ரூபாவுக்கு அதிகரிக்காத வகையில் அபராதம் அல்லது 3 மாதங்கள் சிறைத்தண்டனை விதிக்க நீதிமன்றத்திற்கு அதிகாரம் உள்ளது. வாகன இலக்கத்தின் கடைசி இலக்கத்துடன் தொடர்புடைய திகதிகளில் சிலர் வாகனங்களின் இலக்கத் தகடுகளை மாற்றிக்கொண்டு எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு வந்ததாக சமூக ஊடகங்களில் செய்திகள் வெளியாகி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

# திருகோணமலைகரடிப்பூவல்கிராமத்தில் குடிநீர் தொகுதி கையளிப்பு



(அ . அச்சுதன்)

திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபைக்கு உட்பட்ட குடாக்கரை பகுதில் தேசிய நீர் வளங்கள் வடிகாலமைப்பு சபையின் மூலம் விநியோகிக்கப்படுகின்ற நீர் விநியோகம் அனைத்து குடும்பங்களுக்கும் வேகமாக வருவது இல்லை என்றும் தினந்தோறும் நீர் விநியோகம் விநியோகிக்கப்படுவதில்லை என்றும். இந்த பிரச்சனைக்கு நிரந்தர தீர்வினை பெற்றுத் தருமாறும் பொதுமக்களும், சங்கங்களும் திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபை கௌரவ உப தவிசாளர் முகமட் நௌபர் அவர்களிடம் எழுத்து மூலமான கோரிக்கையினையும் முன்வைத்திருந்தனர். இதற்கான நிரந்தர தீர்வினை பெற்றுக்கொடுக்கும் ஒரு அங்கமாக குடாக்கரை பிரதேசத்தில் கரடிப்பூவல் கிராமத்தில் சேய்க் அப்துல்லா அன்நூரி நிறுவனத்தின் அனுசரணையுடன் ஆழ்துளைகுழாய்க்கிணறு அமைத்து குடிநீர் தொகுதி உப தவிசாளர் முகமட் நௌபர் அவர்களால் மக்கள் பாவனைக்காக கையளிக்கப்பட்டது. இன் நிகழ்வில் அப்பகுதி முக்கியஸ்தர்கள் சேய்க் அப்துல்லா அன்நூரி நிறுவனத்தின் திட்ட முகாமையாளர், பொதுமக்கள் பலர் கலந்து சிறப்பித்தனர்.

# அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலைக்கு இருதய விசேட வைத்திய நிபுணர் நியமனம்



(நூருல் /ஹுதா உமர்)

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலைக்கு இருதய விசேட வைத்திய நிபுணராக டாக்டர் எம். ஏ. நௌஸாத் அலி முதல்முறையாக சுகாதார அமைச்சினால் அண்மையில் நியமிக்கப்பட்டுள்ளதாக அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் அஸாத் எம் ஹனிபா தெரிவித்தார். தென்கிழக்கு பிராந்திய மக்களிடையே அதிகளவாக காணப்படும் தொற்றா நோய்களுள் இருதய நோய், மாரடைப்பு மற்றும் உயர் குருதியமுக்கம் காணப்படுகின்றன. இதனால் திடீர் மாரடைப்புகளால் இளவயது மரணங்கள் தினமும் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. இதற்கான முறையான சிகிச்சைகளை உடனடியாகவும் உயர்தரத்திலும் வழங்க இருதய விசேட வைத்திய நிபுணர் நௌஸாத் அலி இந்த புதிய நியமனம் கிழக்குப் பிராந்திய மக்களுக்கு கிடைத்த மிகப்பெரிய வரப்பிரசாதமாகும். இருதய நோய்க்கான சிகிச்சையை விசேட வைத்திய நிபுணரால் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் பெற்றுக்கொள்ளலாம் என அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் அஸாத் எம் ஹனிபா மேலும் தெரிவித்தார். இந்நிகழ்வில் ஏனைய சுகாதார நிறுவனத் தலைவர்கள், விசேட வைத்திய நிபுணர்கள் உட்பட வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

# களுதாவளை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தின் தீமிதித்தல் நிகழ்வு



(சக்தி)

மட்டக்களப்பு மாவட்டம் களுதாவளை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தின் வருடாந்த திருச்சடங்கின் நான்காம் நாள் திருச்சடங்கு சனிக்கிழமை(23) இரவு மிகவும் சிறப்பான முறையில் இடம்பெற்றதைத் தொடர்ந்து தீ பாய்தல் நிகழ்வும் இடம்பெற்றது. ஆயிரக்கணக்கான பக்தர்கள் புடைசூழ ஆலய முன்றலில் அமைந்துள்ள தீக்குழியில் தீ பாய்தல் நிகழ்வு இடம்பெற்றது. இதன்போது பக்கதர்கள், வாய் அலகு போட்டும், தீச்சட்டடி ஏந்தியும் தமது நேர்த்திக் கடன்களையும் நிறைவேற்றியதையும் அவதானிக்க முடிந்தது.

# பட்டிப்பளை எரிபொருள் நிலையத்தில் அமைதியின்மை

## கலந்துரையாடலை அடுத்து சுமூகநிலையில் எரிபொருள் விநியோகம்





மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை தென்மேற்கு பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட பட்டிப்பளை எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இன்று(24) பெற்றோல் வழங்குவதற்கு தயாரான போது அங்கு அமைதியின்மை ஏற்பட்டது. கடந்த வியாழக்கிழமை குறித்த நிலையத்திற்கு பெற்றோல் நீண்ட காலத்திள் பின் வந்திருந்த நிலையில், அரச நடமுறைக்கேற்ப வாகன இறுதி இலக்கத்தின் அடிப்படையில் பெற்றோல் வழங்கப்பட்டது. வியாழன், வெள்ளி ஆகிய இரு தினங்களும் வழங்கப்பட்ட நிலையில் வெள்ளிக்கிழமை பெற்றோல் முடிவடைந்த நிலையில், மீண்டும் இன்று(24) காலை பெற்றோல் கொண்டுவரப்பட்டு, மக்களுக்கு பகிர்ந்தளிக்க ஆரம்பித்த வேளையில் அமைதியின்மை ஏற்பட்டது.

வாகன இலக்க அடிப்படையில் இவ்வாரம் பெற்றோலை பெற்றுக்கொள்ளாதவர்களுக்கு பெற்றோல் வழங்குவதற்கு தீர்மானிக்கபட்ட நிலையில், சனிக்கிழமை இலக்க வாகனங்களுக்கு பெற்றோலை குறித்த நிலையத்தில் பெற முடியாமல் போவதாக கூறி அமைதியின்மை ஏற்பட்டது.

இன்று கொண்டு வரப்பட்ட பெற்றோல் நாளை(25) திங்கட்கிழமையுடன் நிறைவடைந்தால் தமக்கு வாரத்தில் ஒதுக்கப்பட்டுள்ள சனி, செவ்வாய் ஆகிய இரு நாட்களில் ஒரு நாட்களில் பட்டிப்பளை பெற்றோல் நிலையத்தில் பெறமுடியாது நிலை காணப்படுவதாகவும் குறிப்பிட்டிருந்தனர்.

இந்த நிலையில், இவ்வாரம் பெற்றோலை பெற்றுக்கொள்ளாதவர்களுக்கு மாத்திரம் பெற்றோல் வழங்கப்படும், குடும்ப அட்டையில் பதியப்பட்டு ஒழுங்குமுறையாக வழங்கப்படும் என உறுதிப்படுத்தியதையடுத்து சுமூகமான நிலையில் பெற்றோல் வழங்கப்பட்டது. பொலிஸார், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், இயக்குனர்சபை உறுப்பினர்கள் இணைந்து ஒழுங்குமுறைப்படி பெற்றோலை வழங்குவதற்கான நடவடிக்கையை மேற்கொண்டனர்.




"தா" என்றால் "இந்தா" என்று வழங்கும்

தாந்தாமலை ஸ்ரீ முருகன் ஆலய

வருடாந்த மகோற்சவப் பெருவிழா 2022

திருக்கொடியேற்றம்
22.07.2022 வெள்ளிக்கிழமை

தீர்த்தோற்சவம்
12.08.2022 வெள்ளிக்கிழமை

அனைவரும் வருக! முருகன் திருவருள் பெறுக!

விளம்பர அனுசரணையாளர் : தாந்தியான் வேதநாயகம் (முனைக்காடு)